தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் கார்ப்பரேட் ஆதரவு நிலைக்கு எதிரான கூட்டமைப்பு

If you're seeing this message, that means **JavaScript has been disabled on your browser**, please **enable JS** to see reactions under this article.

**Onetamil News** Dec 20, 2018





# தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் கார்ப்பரேட் ஆதரவு நிலைக்கு எதிரான கூட்டமைப்பு


மதுரை 2018 டிசம்பர் 20 ;தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு ஆதரவான நிலை எடுத்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் ரத்தினவேல் அவர்களின் இது குறித்தான ஆதரவு அறிக்கை தமிழக மக்களின் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. இந்த நிறுவனத்திற்கு எதிராக தமிழகத்தில் மக்கள் எதிர்ப்பு இயக்கங்கள் வலுத்திருக்கும் இத்தருணத்தில், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் இந்நிலைப்பாடு ஸ்டெர்லைட்டை மீண்டும் கொண்டு வருவதற்கு துணை போகும் என்று அஞ்சுகிறோம்.

எனவே தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் தமிழக மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு கார்ப்பரேட் நிறுவனமான வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு துணை நிற்க வேண்டும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த நம்பிக்கைக்கும் எதிர்ப்பார்ப்பிற்கும் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் எதிராக செயல்படுவது வருத்தத்திற்குரியது. 13 உயிர்களை பழிவாங்கிய ஸ்டெர்லைட் நிறுவனம் தமிழ்நாட்டில் இனியும் தொடர்வது இயற்கை நீதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சபை ஸ்டெர்லைட் ஆலை குறித்து இதுவரை எடுத்திருந்த நிலையில் இருந்து மாறுபட்டு, இன்று ஆலைக்குத் துணை போவது பல்வேறு சந்தேகங்களுக்கு இடமளிக்கிறது. இவ்வர்த்தக சபையின் பல உறுப்பினர்களும் இதற்கு ஆதரவாக இல்லை என்பதும் தெரிய வருகிறது. வர்த்தக சங்கத்தின் பெயரை பயன்படுத்திக் கொண்டு முதுநிலைத் தலைவர் ரத்தினவேல் மற்றும் வர்த்தக சங்க செயலர் ஜெகதீசன் ஆகியோர் தன்னிச்சையாக ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவு நிலை எடுப்பது, சங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவது ஆகும். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக வால் மார்ட் நிறுவனம் தமிழகத்திற்குள் நுழைய முயற்சிக்கும் போது, தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் அதன் நுழைவுக்கெதிராக கருத்தரங்கு நடத்தியதை நினைவுபடுத்த விரும்புகிறோம். வர்த்தக சங்கத்தின் இந்த மாற்றத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார்? என்பதை தெரிய விரும்புகிறோம். மதுரை நகரின் அனைத்து அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், ஜனநாயக அமைப்புகள், மக்கள் இயக்கங்கள் ஒன்றிணைந்து தொழில் வர்த்தக சங்கத்தின் இந்த நிலைப்பாட்டை கண்டிக்கிறோம். வர்த்தக சங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு தன்னுடைய ஆதரவை நல்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

வர்த்தக சங்கம் இந்நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை எனில், இக்ககூட்டமைப்பு தொடர்ந்து பல்வேறு இயக்கங்கள் வழியாக வர்த்தக சங்கத்தின் அலுவலகத்தை முற்றுகையிடுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த கூட்டமைப்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி – **CPI** - விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - மனித நேய மக்கள் கட்சி - சோசியல் டெமாக்ரடிக் ஆஃப் இந்தியா **SDPI** - மதச்சார்பற்ற ஜனதா தளம் - தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை - ஆதித் தமிழர் கட்சி - தமிழ்ப் புலிகள் - மக்கள் சிவில் உரிமைக் கழகம் **PUCL** - தமிழ்த் தேசிய பேரியக்கம் - தமிழ் தேசிய மக்கள் முன்னணி - மே 17 இயக்கம் - மக்கள் சட்ட உரிமை இயக்கம் - மதுரை சமநீதி வழக்கறிஞர்கள் சங்கம் - தமிழ்நாடு பெண்கள் இணைப்புக்குழு - சோக்கோ அறக்கட்டளை - சமம் குடிமக்கள் இயக்கம் - மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் செயல்படுகிறது.